## மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் கட்டுபாடுகள்

### நிடோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் ( முன்பு நிடோ என அறியப்பட்ட நிறுவனம்)

| பின்வருபவர்களிடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொடர்பான மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் கட்டுபாடுகளாவன: | |
|---|---|
| **விண்ணப்பதாரர்** | |
| **இணை-விண்ணப்பதாரர்** | |
| **இணை-விண்ணப்பதாரர்** | |
| (இனி தனித்தனியாக மற்றும் / அல்லது கூட்டாக "கடன் வாங்குபவர்கள்" என குறிப்பிடப்படும்) | |
| மற்றும் | |
| **நிடோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு நிடோ என அறியப்பட்ட நிறுவனம்) (நிடோ)** | |

**மேலே கொடுக்கப்பட்டுள்ள கடன் கணக்கு தொடர்பான முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சுருக்கத்தை கீழே காணவும்: I. கடன் விவரங்கள்:-**

| | |
|---|---|
| **கடன் தொகை** | |
| **கடன் தயாரிப்பு** | |
| **கடனின் நோக்கம் (திட்டம்)** | கட்டுமானம் / கொள்முதல் / நீட்டிப்பு / புதுப்பித்தல் / மேம்பாடு / அடமானம் / மனை / கலப்பு / வணிகம் / (வேறு ஏதாவது எனில் குறிப்பிடவும் |
| **வகை (மாறாத வகை அல்லது மாறும் வகை அல்லது இரண்டும்/** | ____________________வருடத்திற்கு a [மாறாதது / மாறக் கூடியது/இரண்டும் – ஆண்டுதோறும்/மாதந்தோறும்] |
| **விதிக்கத்தக்க வட்டி** | ______ % வருடத்திற்கு மாறும் விகிதக் கடன்களுக்கு (% குறிப்பு விகிதம் - % மார்ஜின்); மற்றும்/அல்லது<br>மாறாத விகித கடன்களுக்கான %) |
| **கால அளவு** | _____________வருடங்கள் |
| **தவணை வகைகள்** | மாதாந்திரம் |
| **தவணையுரிமை அல்லது மானியம்** | |
| **வட்டி வீதம் திருத்தி அமைக்கப்படும் தேதி** | |

| | |
|---|---|
| **வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி தெரிவிக்கும் தகவல்தொடர்பு முறைகள் (தொடர்புடைய வழியினை தேர்வுசெய்க)** | வட்டி விகிதத்தில் ஏதேனும் மாற்றம் இருந்தால், அதனை குறித்து நிடோநிடோ நிறுவனத்திடம் உள்ள தகவல் தொடர்பு விவரங்கள் வாயிலாக SMS/ மின்னஞ்சல்/ கூரியர் அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் மின்னணு முறையில் கடன் வாங்குபவருக்கு முறையாகத் தெரிவிக்கப்படும். |

**II. கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| **விண்ணபத்தில்**<br>செயலாக்க கட்டணம்: CERSAI கட்டணம் | செயலாக்க கட்டணம்: CERSAI கட்டணம் | |
| **கடன் அனுமதிக்கப்படாவிட்டால்/விநியோகிக்கப்படாவிட்டால் கட்டணம் திருப்பி வழங்கப்படும்** | கடனைப் பெறுவதற்கு வாடிக்கையாளர் செலுத்திய செயலாக்கக் கட்டணம் திருப்பி வழங்கப்பட மாட்டாது | |
| **கடன் பெறுபவரால் செயல்படுத்தப்பட்ட ஆவணங்களின் எதாவது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கடைபிடிக்கவில்லை என்றால், அத்தகைய இணக்கமின்மையின் தேதி தொடங்கிக் கடன் வழங்குபவர் திருப்தி அடையும் வகையில் அது சரி செய்யப்படும் வரை + பொருந்தக்கூடிய வரிகள்** | **தாமதப்படுத்தப்பட்ட காலம்** | **கடன் தொகைக்கு நடைமுறையில் உள்ள வட்டிக் கட்டணத்திற்கு மேல் கூடுதல் வட்டி விகிதம்** |
| | 90 நாட்கள் | 1% |
| | 90 நாட்களுக்கு மேல் | 2% |

பொருந்தக்கூடிய பிற கட்டணம் மற்றும் பிற விலை விவரங்கள் பற்றிய மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணங்களின் பிற்சேர்க்கையில் கட்டணங்கள் & விலைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன மற்றும் எங்கள் இணையதளத்திலும் இதற்கான தகவல்கள் வழங்கப்படிருக்கும் www.nidohomefin.com

பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் அவ்வப்போது திருத்தப்படக் கூடிய வரிகள், விதிப்புகள், தீர்வை கட்டணங்கள் மற்றும் செஸ் போன்றவை, மேற்கூறிய கட்டணங்கள் மற்றும்/அல்லது விலைகளுக்கு மேல் வசூலிக்கப்படும். கட்டணங்கள் நடப்பு தேதியின்படி இருக்கும் மற்றும் அவ்வப்போது மாறக் கூடும். நிறுவனம் அதன் இணையதளத்தில் திருத்தப்பட்ட பதிப்பை அவ்வப்போது புதுப்பிக்கும்.

கட்டணங்கள், விலைகள், செலவு மற்றும் உரிமைகோரல்கள் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**III. கடனுக்கான பிணையங்கள்**

| | |
|---|---|
| **சொத்து முகவரி** | |
| **உத்தரவாததாரரின் பெயர்** | |

| பிற பிணையங்கள் | |
|---|---|

கடனுக்கு ஈடான பிணையம் என்பது பொதுவாக நிதியளிக்கப்படும் சொத்தின் மீதான பிணைய வட்டி மற்றும் / அல்லது நிடோநிடோ கோருவதற்கேற்ப கூடுதல் சொத்து/ உத்தரவாதமளிப்பவர்களின் உறுதியளிப்பு போன்றவற்றை குறிக்கும். அனுமதிக்கப்பட்ட கடனின் பிணையம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள கடன் ஒப்பந்தம் மற்றும் அனுமதி கடிதத்தைப் காண கடனாளிகள் அறிவுருத்தப்படுகின்றனர்.

**IV. சொத்து/கடனாளருக்கான காப்பீடு**

நிடோநிடோ நிறுவனத்திற்கு தேவைப்படும் மதிப்புக்கு மற்றும் தீ, பிற வழக்கமான ஆபத்துகள் மற்றும் இடர்களுக்கு எதிராக, கடன் வாங்கியவர், காப்பீட்டு நிறுவனத்துடன் சொத்தை காப்பீடு செய்து வைத்திருக்க வேண்டும். காப்பீட்டுக் கொள்கையில் நிடோநிடோ நிறுவனம் மட்டுமே பயனாளியாக இருக்க வேண்டும்.

**சொத்து காப்பீடு:** ______________________________

**கடன் வாங்குபவர்களின் காப்பீடு:** ______________________________

**V. கடனை வழங்குவதற்கான கட்டுப்பாடுகள்**

வீட்டுக் கடன் அனுமதிக் கடிதம் மற்றும் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் பட்சத்தில் மட்டுமே நிடோ நிறுவனம் அதன் திருப்தி மற்றும் முழு விருப்பத்தின் பேரில் கடன் வாங்குபவருக்கு கடனையோ அல்லது அதன் தவணையையோ வழங்கும். அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a. கடன் பெறுபவர் நிடோ நிறுவனத்தில் கடன் பெறுவதற்கான தகுதியை பூர்த்தி செய்ய வேண்டும்.
b. அனுமதி கடிதம்/கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்
c. கடன் ஒப்பந்தம் மற்றும் பிற துணை ஆவணங்களை ஏற்க வேண்டும்.
d. தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதற்குப் எதிர்கால தேதியிட்ட காசோலைகள்/ECS போன்றவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்
e. நிடோ நிறுவனத்தின் பெயரில் பிணையம் (செக்யூரிட்டி) உருவாக்க வேண்டும்
f. கடனாளி, சொத்தின் (பிணையம்) முழுமையான, தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய உரிமையைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும், மேலும் அத்தகைய சொத்து முற்றிலும் வில்லங்கம் இல்லாமலும் மற்றும் பிற பொறுப்பிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும்.
g. கடனாளரது வேலை / தொடர்பு கொள்வதற்கான விவரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் நிடோ நிறுவனத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
h. வழங்கப்படும் தொகை பயன்பாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு மனை வாங்க/மனையில் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். கட்டுமான செய்யும் சூழலில், கட்டுமான நிலைகளுக்கேற்றவாறு பண விநியோகம் இணைக்கப்பட வேண்டும்.
i. அனுமதித்த முழு தொகையும் வழங்கப்படாத வரை மாதத் தவணைக்கு-முன்பான வட்டி வசூலிக்கப்படும்
j. கடன் தொகையின் மீது தவணை தவறல் நிகழ்ந்திருக்க கூடாது. கடன் ஒப்பந்தத்தில் கடன் தவணை தவறுதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
k. இவற்றில் ஏதேனும் தவறும் சூழ்நிலை ஏற்பட்டால், நிடோ நிறுவனத்தின் கருத்துப்படி, கடன் ஒப்பந்தம் மற்றும் கடனைப் பெறுவதற்காக கடனாளியால் செயல்படுத்தப்பட்ட பிற நிலையான ஆவணங்களின்படி கடனாளியின் வேண்டுகோளை நிறைவேற்ற இயலாமல் போகலாம்.
l. NOC/அனுமதி/அடமான அனுமதிகள் போன்றவை மற்றும் பிணையம் உருவாக்குதல்

**VI. கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்துதல்**

வட்டி விகிதம், முன் சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணை வட்டி (PEMII)/சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணை (EMI) மற்றும் தவணைகளின் எண்ணிக்கை, கடனின் காலம் ஆகியவை கடன் வாங்குபவருக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஈடுசெய்யக்கூடிய வட்டி விகிதம் /PEMII/EMI போன்றவற்றில் ஏதேனும் மாற்றம் இருந்தால், நிடோ நிறுவனத்தின் நியாயமான நடைமுறைக் கோட்பாடுகளின்படி

நிடோ நிறுவனத்திடம் உள்ள கடனாளியினை தொடர்பு கொள்வதற்கான வழி வாயிலாக கடனாளிக்கு தெரியப்படுத்தும். கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட EMI/PEMII காலத்தின்படி கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

EMI/PEMII திருப்பிச் செலுத்துவது நிடோ நிறுவனத்தின் பெயரில் ECS/எதிர்கால தேதியிட்ட காசோலைகள் வழங்குவதன் மூலம் முறைப்படுத்தப்படும்.

**கடனாளி உறுதி செய்ய வேண்டியவை:**

- மாத தவணை எடுக்கவிருக்கும் வங்கி கணக்கில் போதுமான பணம் இருப்பதை கடனாளி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- மாத தவணையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்பட்ட காசோலைகள்/இன்ஸ்ருமென்ட்களை ரத்து செய்யவோ/நிறுத்தி வைக்கவோ கூடாது. மேலும், திருப்பிச் செலுத்தும் இன்ஸ்ட்ருமென்ட்கள் வழங்கிய தொகை எடுக்கக் கூடிய வங்கி கணக்கை மூடவோ அல்லது மாற்றவோ கூடாது (நிடோ நிறுவனம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பணத்தை திருப்பி செலுத்துவதற்கான மாற்று ஏற்பாடு செய்யாத வரையில்).

- தொடர்புடைய நிலுவைத் தேதியில் அல்லது அதற்கு முன் மாத தவணையைச் செலுத்த வேண்டும், இல்லை என்றால், நிலுவையில் உள்ள கடன் தொகை மற்றும் விதிக்கப்பட்ட அனைத்து வட்டியையும் உடனடியாக செலுத்த வேண்டியதாகி விடும். கட்டண அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடனாளி கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.
- கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**VII. நிலுவை தொகையை மீட்பது குறித்த விரிவான வழிமுறைகள்**

தவணை செலுத்த தவறினால் (அதாவது கடனாளியின் கடன் கணக்கில் நிலுவையில் உள்ள தொகையை உரிய தேதிக்குள் செலுத்தவில்லை என்றால் அல்லது ஒப்பந்தத்தின் ஏதேனும் உட்பிரிவை மீறினால்), கடனாளி பணத்தை திருப்பி செலுத்துவதற்காக அவ்வப்போது நினைவூட்டல் தகவல் அனுப்பப்படும். அஞ்சல், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், குறுஞ்செய்தி மற்றும்/ அல்லது நிலுவைத் தொகைகளை வசூலிக்க, நினைவூட்டும் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் மூலம் கடனாளியின் கடன் கணக்கில் நிலுவையில் உள்ள தொகை செலுத்த கோரும் பொருட்டு அவ்வப்போது நினைவூட்டப்படும். வசூலிப்பு முறை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

**a.** **டெலி-காலிங் மற்றும் பிக்-அப்: கடனாளியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு,**
கடன் தவணை தேதி தவறவிட்டது குறித்தும் விரைவாக நிலுவையினை திருப்பி செலுத்துமாறும் கோருதல்.

**b.** **நேரடி வசூல்: கடன் வாங்குபவரை சந்தித்து செலுத்த வேண்டிய தொகையை வசூலித்தல் நேரில் நிடோ ஊழியர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் வரக் கூடும். பணம் ரொக்கமாகவோ அல்லது காசோலை/டிடி வடிவிலோ சேகரிக்கப்பட்டு கடனாளி பணம் செலுத்தியதற்கான ரசீது வழங்கப்படும்.**

**c.** **நிடோ கொள்கையின்படி பொருந்தக் கூடிய சட்ட விதிகளுக்குட்பட்டு தவணை தவறும் கணக்குகள் மீது தேவைப்பட்டால் உரிய சட்டப் பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

மீது தேவைப்பட்டால் உரிய சட்டப் பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனவே, நிடோ நேரடி வசூலுப்பு, எழுத்துப்பூர்வ தகவல் தொடர்பு மற்றும் சட்ட நடவடிக்கை ஆகியவற்றின் பொருத்தமான முறையினை பயன்படுத்தி, வெவ்வேறு வகைக் குற்றக் கணக்குகளுக்கேற்ப முறையாக மற்றும் பயனுள்ள வழியினை உறுதிசெய்யும்.

**VIII. வருடாந்திர நிலுவைத் தொகை அறிக்கை வழங்கப்படும் தேதி: வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில்.**

**IX. வாடிக்கையாளர் சேவைகள்**

**A) பார்வை நேரம் -கிளைகள்: காலை 10 மணி முதல் - மாலை 5 மணி வரை, திங்கள்-வெள்ளி (பொது விடுமுறை நாட்கள் தவிர)**

**B) ஆவணங்களுக்கான கோரிக்கை உட்பட சேவை தொடர்பான ஏதேனும் சிக்கல்களுக்கு, நிடோ நிறுவனத்தை கடனாளி தொடர்பு கொள்ளலாம்:**

(i) assistance@nidohomefin.com என்ற முகவரியில் மின்னஞ்சல் செய்யலாம்

(ii) திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 1-800-1026371 (கட்டணமில்லா எண்) மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

(iii) www.nidohomefin.com இணையதளத்தில் ஆன்லைன் வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

**C) பின்வரும் ஆவணங்களை வழங்குவதற்கான காலக்கெடு:**

(i) கடன் கணக்கு அறிக்கை - 2 வேலை நாட்கள்

(ii) உரிமை ஆவணத்தின் நகல் - 12 வேலை நாட்கள்

(iii) கடனை முடித்தல்/பரிமாற்றம் செய்தவுடன் அசல் ஆவணங்களைத் திரும்பப் பெறுதல்-15 வேலை நாட்கள்

**IX. குறை நிவர்த்தி செய்தல்**

ஏதேனும் புகார்/குறை இருக்கும் சூழலில், கடனாளி பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் எங்கள் நிறுவன அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்:

திருமதி. ஷிவாலி ஷிண்டே

மின்னஞ்சல்: assistance@nidohomefin.com
அஞ்சல்: நிடோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு எடல்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது), டவர் 3, விங் பி, கோஹினூர் சிட்டி கிரோல் சாலை, குர்லா(மேற்கு) மும்பை 40007 தொலைபேசி: 022 – 4272 2554/ /கட்டணமில்லா எண்: 1-800-1026371

புகாரை ஆராய்ந்த பிறகு, அத்தகைய புகார்/குறையைப் பெற்றதிலிருந்து ஆறு (6) வாரங்களுக்குள் கடனாளிக்கு பதிலை வழங்குவது நிடோ நிறுவனத்தின் பொறுப்பாகும்.

வாடிக்கையாளர் நிறுவனத்திடமிருந்து பதிலைப் பெறவில்லை அல்லது பெறப்பட்ட பதிலில் திருப்தியடையவில்லை என்றால், புகார்தாரர் தனது புகாரை தீர்க்க தேசிய வீட்டுவசதி வங்கியின் குறை தீர்ப்பாய பிரிவை அணுகலாம். http://grids.nhbonline.org என்ற இணைப்பில் ஆன்லைன் முறையில் பதிவு செய்யலாம் அல்லது ஆஃப்லைனில் https://grids.nhbonline.org.in/(S(gbasi5bgsifwr4wmckts4z4x))/Complainant/Default.aspx தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்:

குறை தீர்ப்பாய பிரிவு, ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை துறை, தேசிய வீட்டுவசதி வங்கி, 4வது தளம், கோர்-5A, இந்தியா ஹேபிடேட் சென்டர், லோதி சாலை, புது தில்லி - 110 003

கடனின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இங்குள்ள தரப்புகள் செயல்படுத்தும்/ செயல்படுத்தக் கூடிய கடன் மற்றும் பிற பிணை ஆவணங்களுக்கு இணங்கி செயல்படுவதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கடன் பெற்ற நான்/ கடனாளிகளான நாங்கள் மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எனது/எங்களுடைய வட்டார மொழியில் என்னால்/எங்களால் / எனக்கு/எங்களுக்கு வாசிக்கப்பட்டது என்பதை உறுதிசெய்து அறிவிக்கிறேன்/அறிவிக்கிறோம்.
நிறுவனத்தை சேர்ந்த திரு/செல்வி.________________________________________ மேலே குறிப்பிட்டுள்ளபடி நான்/நாங்கள் விதிமுறை மற்றும் நிபந்தனைகளை புரிந்து கொண்டு, ஒப்புகொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம், உறுதிசெய்து, பின்பற்றுவதாக அறிவிக்கிறேன்/அறிவிக்கிறோம். மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நகல் வழங்கப்பட்டத்தை நான்/நாங்கள் உறுதி செய்கிறேன்/உறுதி செய்கிறோம்.

| | |
|---|---|
| **கடன் வாங்கியவர் (கள்) பெயர்**<br><br>**கையொப்பம்(கள்)** | **நிடோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு எடல்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்ட நிறுவனம்)**<br><br>**அங்கீகரிக்கப்பட்டவர்களின் கையொப்பம்** |